03.11.2023

HMOP. No. 60 / 2023 ம.சா. 2 வள்ளியம்மை க/பெ. தியாகராஜன்

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட முழு விவரமும் எனக்கு தெரியுமா என்றால் படித்துப் பார்த்துதான் கையொப்பம் போட்டேன், என் மகன் என்பதால் விவரம் தெரியும். நான் கையொப்பம் போட்டதாக சொல்லும் பிரமாணப் பத்திரத்திலுள்ள விபரத்தினை வழக்கறிஞரிடம் நான் நேரிடையாக சென்று சொன்னேனா என்றால் இதில் உள்ள விபரம் எனக்குத் தெரியும். என் மகன் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் விவாகரத்து வழக்கு போட்டுள்ளார். எதிர் மனுதாரர் நாகம்மை என்கிற அனிதாவை நாங்கள்தான் பெண் பார்த்து முடிவு செய்தோம் என்றால் சரிதான், ஒருவாரம் கழித்துதான் என் மகன் வந்தார். திருமண நிச்சயதார்த்திற்கு முன்பே என் மகன், மருமகளை துபாய்க்கு அழைத்து செல்வார் என்று கூறிதான் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் சரிதான். இந்த திருமணத்திற்கு பிறகு பட்டமங்கலத்தில் உள்ள பூர்வீக வீட்டில் நான், என் மகன்கள், என் மகள்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். இந்த திருமணம் நடந்த சமயத்தில் மூத்த மகள் நாச்சியம்மை எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான், கொஞ்சம் நாள் இருந்தார், பின்னர் அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார்கள். என் மகள் எவ்வளவு நாட்கள் இருந்தார் என்றால் 6 மாதம் இருந்தார். இந்த திருமணத்திற்கு பிறகு என் மருமகளை சண்டை சச்சரவு இல்லாமல் நல்ல முறையில் வைத்திருந்தேன் என்றால் சரிதான். என் மகனும் அவரது மனைவியிடம் எவ்வித சண்டை சச்சரவும் இல்லாமல் சந்தோஷமாக இருந்தார் என்றால் சரிதான். தற்போ நான் காரைக்குடியில் உள்ள என் மகள் வீட்டில் வசித்து வருகிறேன். என் குடும் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை பட்டமங்கலத்தில் உள்ள வீட்டு முகவரியில் உள்ளது என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டையில் என் மகன் வழி 2 பேத்திகள் பெயரையும் சேர்க்கவில்லை என்றால் என் மருமகள் உள்ளிட்ட 3 பேரின் பெயர்களையும் சேர்க்கவில்லை. என் மருமகளுக்கு முதல் குழந்தை கருவுற்றபோது அதற்கான மருத்துவ செலவினை என் மகன் எனக்கு பணம் அனுப்பிதான் பார்த்தார் என்றால் சரிதான். முதல் குழந்தைக்கான பிரசவ செலவினை என் மருமகளின் பெற்றோர் செய்தனர் என்றால் இல்லை நான்தான் செய்தேன். நான் பிரசவத்திற்காக எந்த பணமும் கொடுக்கவில்லை, கொடுத்தாக என் மகனிடம் நான் பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு பிறந்த முதல் குழந்தைக்கு என் மருமகளின் பெற்றோர் வீட்டில் 1 1/2 சவரன் செயின், 1/2 சவரன் தோடு, 1/4 சவரன் மோதிரம், பட்டுசேலை செய்தனர் என்றால் சரிதான், பட்டுப்பாவாடை தான் கொடுத்தனர். குழந்தை பிறந்த 30 வது நாள் சரியான மழை என்பதால் என் மருமகளையும், குழந்தையையும் என் மருமகளின் பெற்றோரே கொண்டுவந்துவிட்டனர் என்றால் முறைப்படி செய்ய வேண்டியதை நாங்கள் செய்தோம். நாங்கள் முறைப்படி எதுவும் செய்யவில்லை, அவர்கள் தான்

அழைத்துக்கொண்டு வந்து விட்டனர் என்றால் இல்லை. என் மகன் அனுப்பும் பணத்தினை நான் செலவு செய்துவிட்டு என் மருமகளுக்கும் பேரப்பிள்ளைக்கும் செலவு செய்ததாக பொய்யாக என் மகனிடம் கூறினேன் என்றால் என் மகன் என்னிடம் பணம் அனுப்பியதில்லை. மருமகளும் குழந்தையும் எங்கள் வீட்டில் எங்களுடன் தான் இருந்தனர் என்றால் கொஞ்சம் நாட்கள் இருந்தனர், பின்னர் சண்டை போட்டு விட்டு சென்றுவிட்டனர். என் மருமகளும் பேரக்குழந்தையும் வீட்டி்ல் இருந்தபோது நானும் என் மகள்களும் அவர்களை சரியாக கவனிக்காததால் என் மகன் என் மருமகளை தான் வந்தவுடன் வா என்று கூறி மருமகளின் அம்மா வீட்டிற்கு அனுப்பிவைத்தார் என்றால் இல்லை. என் மருமகள் அவரது அம்மா வீட்டில் இருந்தபோது பண்டிகை, என் மகன் துபாயிலிருந்து வரும்போது மட்டுமே என் மருமகளை பட்டமங்களத்திலுள்ள வீட்டிற்கு வர அனுமதிப்போம், மற்ற நாட்களில் அனுமதிக்க மாட்டோம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் வரவு செலவு , நிர்வாகத்தினை எனது மூத்த மகள் நாச்சியம்மைதான் பார்த்து வருகிறார் என்றால் சரிதான், மற்றவர்கள் வெளியூரில் இருப்பதால் பார்த்துவருகிறார். எங்கள் வீட்டில் முகப்பு, சமையலறை என 2 இடங்களில் ஃபோன் இருந்தது என்றால் வளைவிற்குள் இருந்தது, அதற்கு அடுத்துதான் முகப்பு.எங்கள் வீட்டில் 2 இடங்களில் ஃபோன் இருந்தது, ஒரு ஃபோனில் பேசுவதை மற்றொரு இடத்தில் உள்ள ஃபோன் வாயிலாக கேட்கலாம் என்றால் ஒரு ஃபோன் தான் இருந்தது. தன்னை துபாய்க்கு அழைத்துச்செல்லவில்லை என்றால் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தி கொள்வதாக மிரட்டியதாக என் முதல் விசாரணையில் கூறியுள்ளது பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.என் மருமகள் தற்கொலைக்கு முயன்றதாக அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம், உறவினர்களிடம் கூறினோமா என்றால் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரியும். இந்த விவரம் பற்றி துபாயிலிருந்த என் மகனுக்கு நான் ஃபோன் மூலம் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். என் இளைய மகனுக்கு 50 வயதாகியும் இதுவரை திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். என் மூத்த மகன் திருச்சியில் தனியாக உள்ளார், நாங்கள் அவரிடம் பேச்சுவார்த்தை இல்லையென்றால் பேசிக்கொள்வோம். 2007 செப்டம்பர் மாதம் என் மகன், என் மருமகளையும் குழந்தையையும் துபாய்க்கு அழைத்து செல்லதான் வந்தார் என்ற விவரம் என் மருமகளுக்கு தெரியும் என்றால் தெரியும். துபாய்க்கு சென்ற பிறகு என் மகன் தனது மனைவியையும் குழந்தையையும் பராமரித்து சந்தோஷமாக வைத்திருந்தார் என்றால் அவர் நன்றாக தான் வைத்திருந்தார், என் மருமகள் தான் என் மகனுக்கு சாப்பாடு போடாமல் பாடுபடுத்தினார். கிட்டதட்ட 10 வருடங்களுக்கு மேலாக என் மகனும் என் மருமகளும் துபாயில் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரிதான். 2008 ல் என் மருமகளின் தகப்பனார் இறந்ததற்கு என் மருமகளும் , பேரப்பிள்ளைகள் இருவரும் துபாயிலிருந்து வந்தனர், என் மகன் வரவில்லை. ஒரு வருடத்திற்குள் ஏன் இவ்வளவு செலவு செய்து அனுப்பி வைத்தாய் என நான் என் மகனிடம் சண்டை போட்டு பேசவில்லை என்றால் சரியல்ல. 2008 ல் என் மருமகள் வந்த பிறகு காரைக்குடியில் வீடு பார்த்து குடி வைத்து என் பேரப்பிள்ளையையும் பள்ளியில் சேர்த்து விட்டேன் என்றால், நாங்கள் தான் பார்த்துக்கொண்டோம். குழந்தையை நான் தான் பள்ளியில் சேர்த்து விட்டேன் என்றால், அவர்கள்

சேர்த்தார்கள் பணம் மட்டும் நாங்கள் கொடுத்தோம். அதற்கான பணத்தினை என் மகன் எனக்கு அனுப்பி வைக்க, நான் தான் என் மருமகளுக்கும் பேரப்பிள்ளைக்கும் செலவு செய்தேன் என்றால் சரிதான். அந்தப் பணத்தில் பெருந்தொகையை நான் எனக்கு செலவு செய்து கொண்டு தேவையான பொருட்களை கூட என் மருமகளுக்கு வாங்கித் தர மறுத்தேன் என்றால் இல்லை. அதனால் என் மகன் என் மருமகளுக்கு பணம் கொடுத்து மீதிப் பொருட்களை வாங்கிக் கொள்ள சொன்னார் என்றால் அது பொய். நான் சொல்வது போல் என் மருமகள் எந்த சண்டை சச்சரவும் செய்யவில்லை, நானும் என் மகனும் தான் பிரச்சனை செய்தோம் என்றால் இல்லை. துபாயில் சண்டை நடந்ததாக சொல்வதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஃபோனில் தான் சொல்வார்கள். என் மகனும் மருமகளும் சேர்ந்து வாழ்ந்தால் சொத்து அவர்களுக்கு சென்றுவிடும் என்ற நான் தான் அவர்களை சேர்ந்து வாழ விடாமல் தடுத்து வருகிறேன் என்றால் இல்லை. நானும் என் மூத்த மகள் நாச்சியம்மையும் என் மகனுக்கு தேவையற்றதை சொல்லிகொடுத்துதான் என் மகன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் மருமகள் தற்கொலைக்கு முயன்றார் என்றோ, என் மகனை கத்தியால் குத்த முயன்றார் என்றோ, என்னை கழுத்தை நெரித்து காயம் ஏற்படுத்தினார் என்றோ நாங்கள் எந்த காவல் நிலைய புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் தான் போலிசில் புகார் கொடுத்தனர். இந்தியாவில் இருக்கும்போது நானும், துபாயில் இருக்கும்போது என் மகனும் என் மருமகளைக் கொடுமைபடுத்தியதால்தான் அவர் காவல்நிலைய புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, நாங்கள் கொடுமைபடுத்தவில்லை. 2019 லிருந்து இன்றுவரை பட்டமங்கலத்தில் உள்ள வீட்டிற்கு என் மருமகளையோ, என் பேத்திளையோ வர அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல, அவர்தான் வந்தால் பிரச்சனை செய்வார். என் மருமகள் வாழக்கூடாது என்பதால் தான் எங்கள் குடும்ப அட்டையில் என் மருமகள், என் பேரப்பிள்ளைகள் பெயரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை என் மகன் கொடுக்கும் பணத்தில் தான் என் மருமகள் படிக்க வைத்து பராமரித்து, குடும்பத்தை கட்டுக்கோப்பாக வைத்து வருகிறார் என்றால் சரிதான். என் மருமகள் எனக்கும் என் மகனுக்கும் எதிராக எந்த வழக்கும், எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மருமகள் என் மகனுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்றுதான் இவ்வழக்கில் கட்சிசெய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பேத்திகளின் எதிர்காலத்திற்காக என் மருமகள் என் மகனுடன் சேர்ந்து வாழ்வதில் எனக்கு எந்த ஆட்சேபனை இல்லை என்றால் என் மகனிடம் தான் கேட்க வேண்டும். மருமகளுக்கும், 2 பேரப்பிள்ளைகளுக்கும் இன்றைய தேதி வரை பட்டமங்கலத்து வீட்டு முகவரியில் முகவரி ஏற்படவில்லை என்பதிலிருந்து நாங்கள் அவர்களை வாரிசுகளாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பட்டமங்கலத்தில் உள்ள பூர்வீக வீடு பொதுவான வீடு என்றால் சரிதான். அந்த வீட்டை நாங்கள் புதுப்பித்தோம் என்றால் சரிதான், என் சின்ன மகன் செய்தார். பட்டமங்கலத்தில் உள்ள வீட்டிற்குள் விடவில்லை என்றும், இந்த முகவரிக்கு குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை ஆகியவை ஏற்படுத்த விடவில்லை என்றுதான் என் மருமகள் அனைத்து மகளிர் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் மகனும், மருமகளும் இன்றைய தேதிவரை சேர்ந்து வாழ தயாராக தான் உள்ளனர், நானும் என் மூத்த மகளும் தான் சேர்ந்து வாழ விட வில்லை என்றால் சரிய்ல்ல. கடந்த 2023 ஜூன் மாதத்தில் நான் என் மருமகளுக்கு ஃபோன் செய்தேன் என்றால் சரியல்ல. நான் ஃபோன் செய்து என் மருமகளிடம் விசாரித்து விட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. நான் ஃபோன் செய்து விட்டு என் மருமகள் ஃபோன் செய்ததாக என் மகனிடம் தவறாக சொல்லி சண்டை இழுத்துவிட்டேன் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படகிறது, மறு விசாரணை இல்லை.**